## திருப்பல்லாண்டு பெரியாழ்வார் திருமொழிகளின் தனியன்கள்

### நாதமுனிகள் அருளிச் செய்தது

கு₃ருமுக₂ம் அநதீ₄த்ய ப்ராஹ வேத₃ாந் அஶேஷாந்
நரபதி பரிக்லுப்தம் ஶுல்கம் ஆத₃ாதுகாம: |
ஶ்வஶுரம் அமரவந்த்₃யம் ரங்க₃நாத₂ஸ்ய ஸாக்ஷாத்
த்₃விஜகுல திலகம் தம் விஷ்ணுசித்தம் நமாமி ||

### பாண்டிய பட்டர் அருளிச் செய்தவை

மின்னார் தடமதிள் சூழ் * வில்லிபுத்தூர் என்று ஒருகால் *
சொன்னார் கழற்கமலம் சூடினோம் * - முன்னாள்
கிழி அறுத்தான் என்று உரைத்தோம் * கீழ்மையினில் சேரும்
வழி அறுத்தோம் நெஞ்சமே! வந்து

பாண்டியன் கொண்டாடப் பட்டர்பிரான் வந்தான் என்று *
ஈண்டிய சங்கம் எடுத்தூத * - வேண்டிய
வேதங்கள் ஓதி விரைந்து கிழி அறுத்தான் *
பாதங்கள் யாமுடைய பற்று

---

## பெரியாழ்வார் அருளிச் செய்த
## திருப்பல்லாண்டு

** பல்லாண்டு பல்லாண்டு * பல்லாயிரத்தாண்டு *
பலகோடி நூறாயிரம் *
மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா! * உன்
சேவடி செவ்வி திருக்காப்பு 1

©Copyright RESERVED by -Sri Ram Samsthan Inc. Cumming, GA
Source: Ccontent from http://acharya.org

Last Updated On: 09/5/2022

** அடியோமோடும் நின்னோடும் * பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு *
வடிவாய் நின் வல மார்பினில் * வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு *
வடிவார் சோதி வலத்துறையும் * சுடர் ஆழியும் பல்லாண்டு *
படை போர் புக்கு முழங்கும் * அப்பாஞ்சசன்னியமும் பல்லாண்டே 2

வாழாட்பட்டு நின்றீர் உள்ளீரேல் * வந்து மண்ணும் மணமும் கொண்மின் *
கூழாட்பட்டு நின்றீர்களை * எங்கள் குழுவினில் புகுதல் ஒட்டோம் **
ஏழாட்காலும் பழிப்பிலோம் நாங்கள் * இராக்கதர் வாழ் * இலங்கை
பாழாளாகப் படை பொருதானுக்குப் * பல்லாண்டு கூறுதுமே 3

ஏடு நிலத்தில் இடுவதன் முன்னம் வந்து * எங்கள் குழாம் புகுந்து *
கூடு மனம் உடையீர்கள் வரம்பொழி * வந்தொல்லைக் கூடுமினோ **
நாடு நகரமும் நன்கறிய * நமோ நாராயணாய என்று *
பாடு மனமுடைப் பத்தர் உள்ளீர்! * வந்து பல்லாண்டு கூறுமினே 4

அண்டக் குலத்துக்கு அதிபதி ஆகி * அசுரர் இராக்கதரை *
இண்டைக் குலத்தை எடுத்துக் களைந்த * இருடீகேசன் தனக்கு **
தொண்டக் குலத்தில் உள்ளீர்! வந்தடி தொழுது * ஆயிர நாமம் சொல்லி *
பண்டைக் குலத்தைத் தவிர்ந்து * பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு என்மினே 5

எந்தை தந்தை தந்தை தந்தை தம் மூத்தப்பன் * ஏழ்படிகால் தொடங்கி *
வந்து வழி வழி ஆட்செய்கின்றோம் ** திருவோணத் திருவிழவில்
அந்தி அம்போதில் அரி உருவாகி * அரியை அழித்தவனை *
பந்தனை தீரப் பல்லாண்டு * பல்லாயிரத்தாண்டு என்று பாடுதுமே 6

தீயில் பொலிகின்ற செஞ்சுடர் ஆழி * திகழ் திருச்சக்கரத்தின் *
கோயில் பொறியாலே ஒற்றுண்டு நின்று * குடி குடி ஆட்செய்கின்றோம் **
மாயப் பொருபடை வாணனை * ஆயிரம் தோளும் பொழி குருதி
பாய * சுழற்றிய ஆழி வல்லானுக்குப் * பல்லாண்டு கூறுதுமே 7

©Copyright RESERVED by -Sri Ram Samsthan Inc. Cumming, GA
Source: Ccontent from http://acharya.org

Last Updated On: 09/5/2022

நெய்யிடை நல்லதோர் சோறும் * நியதமும் அத்தாணிச் சேவகமும் *
கை அடைக்காயும் கழுத்துக்குப் பூணொடு * காதுக்குக் குண்டலமும் **
மெய்யிட நல்லதோர் சாந்தமும் தந்து * என்னை வெள்ளுயிர் ஆக்க வல்ல *
பையுடை நாகப் பகைக் கொடியானுக்குப் * பல்லாண்டு கூறுவனே 8

உடுத்துக் களைந்த நின் பீதக ஆடை உடுத்துக் * கலத்ததுண்டு *
தொடுத்த துழாய் மலர் சூடிக் களைந்தன * சூடும் இத்தொண்டர்களோம் **
விடுத்த திசைக் கருமம் திருத்தித் * திருவோணத் திருவிழவில் *
படுத்த பைந்நாகணைப் பள்ளி கொண்டானுக்குப் * பல்லாண்டு கூறுதுமே 9

எந்நாள் எம்பெருமான் * உந்தனக்கு அடியோம் என்று எழுத்துப்பட்ட
அந்நாளே * அடியோங்கள் அடிக்குடில் * வீடு பெற்று உய்ந்தது காண் **
செந்நாள் தோற்றித் * திருமதுரையுள் சிலை குனித்து * ஐந்தலைய
பைந்நாகத்தலைப் பாய்ந்தவனே! * உன்னைப் பல்லாண்டு கூறுதுமே 10

** அல்வழக்கு ஒன்றும் இல்லா * அணிகோட்டியர் கோன் * அபிமானதுங்கன்
செல்வனைப் போலத் * திருமாலே! நானும் உனக்குப் பழவடியேன் **
நல் வகையால் நமோ நாராயணா என்று * நாமம் பல பரவி *
பல் வகையாலும் பவித்திரனே! * உன்னைப் பல்லாண்டு கூறுவனே 11

** பல்லாண்டென்று பவித்திரனைப் * பரமேட்டியை * சார்ங்கம் என்னும்
வில்லாண்டான் தன்னை * வில்லிபுத்தூர் விட்டுசித்தன் விரும்பிய சொல் **
நல்லாண்டென்று நவின்றுரைப்பார் * நமோ நாராயணாய என்று *
பல்லாண்டும் பரமாத்மனைச் * சூழ்ந்திருந்து ஏத்துவர் பல்லாண்டே 12

**அடிவரவு**: பல் அடி வாழ் ஏடு அண்டம் எந்தை தீ நெய் உடுத்து எந்நாள் அல்வழக்கு பல்லாண்டு வண்ணம்

**பெரியாழ்வார் திருவடிகளே சரணம்**

*©Copyright RESERVED by -Sri Ram Samsthan Inc. Cumming, GA*
*Source: Ccontent from http://acharya.org*